

திராவிட மாடல் அரசுக்கு ஆதரவு தெரிவித்து தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக நிறுவனத் தலைவர் மாயவன் அவர்களுடைய ஆசிரியர் விரோத, இயக்க விரோத நடவடிக்கைகளை கண்டித்து அச்சங்கத்திலிருந்து விலகி பல்வேறு மாவட்டங்களில் இருந்து கரூர் மலைக்கொழுந்தன் தலைமையில் தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம் என்கிற பெயரில் புதிய அமைப்பை உருவாக்கியுள்ளார்கள் .



தருமபுரி மேற்கு மாவட்டம் செட்டிக்கரை அரசு பொறியியல் கல்லூரி அருகில் சிறப்பான முறையில் இயங்கி வரும் கலைஞர் நூலகத்தில் போட்டி தேர்வுக்கு படித்து அரசு பணி, மற்றும் வங்கி பணிக்கு தேர்வு பெற்று பணியில் இணைந்த வங்கி அலுவலர் சி.நவீன், வருவாய் துறை அலுவலர் சி.முருகன்,நீதித்துறை அலுவலர் திருமதி ஆ.சத்தியபாமா, கிராம நிர்வாக அலுவலர் எஸ்.செல்வகணபதி, ஆகியோருக்கு தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் பொன்னாடை அணிவித்து,தென்னங்கன்று வழங்கி பாராட்டினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் கே.பி.சக்திவேல்,மாது,பிரபுராஜசேகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு,உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.





ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் ஏற்பாட்டில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் பெண்கள் கணினி அறிவை வளர்த்துக் கொள்ளும் வகையில் ”அப்பா இலவச கணினி பயிற்சி முகாம் அலுவலகம் மற்றும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் ஆகியவற்றில் மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி, மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி, அந்தியூர் ப.செல்வராசு எம்.பி. ஆகியோர் திறந்து வைத்தனர். நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் வி.சி சந்திரகுமார், மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், குறிஞ்சி என்.சிவக்குமார், வீரமணி ஜெயக்குமார், மாவட்ட நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், செல்லபொன்னி, க.சின்னையன் ப.க.பழனிச்சாமி, டி.எஸ்.குமாரசாமி, கதிரம்பட்டி மகாலிங்கம், எல்லப்பாளையம் சிவக்குமார், மாநகர மு.சுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### நீர்வளத்துறை அரசுச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன் வரவேற்புரை!

# நிலையான நீர்வள மேலாண்மைக்கான மக்கள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி!

## தலைமைச் செயலாளர் என்.முருகானந்தம் துவக்கி வைத்து உரையாற்றினார்!

*சென்னை, ஜூன்.15-*

*தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறையின் சார்பில், நேற்று முன்தினம் (14.06.2025) நீர்நிலைகள் புத்துயிர் பெறுவது மற்றும் நீர்த்தேவையில் தன்னிறைவு பெறுவதின் அவசியத்தை உணர்த்தும் பொருட்டு “நிலையான நீர்வள மேலாண்மைக்கான மக்கள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி” என்ற தலைப்பில் பயிலரங்கம் சென்னை எழும்பூரில் உள்ள ரேடிஷன் ப்ளூவில் நடைபெற்றது. இப்பயிலரங்கத்தில் தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை , சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, பங்குதாரர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியோர் பங்கேற்றனர்.*

*இப்பயிலரங்கத்தில் பங்கேற்ற பிரதிநிதிகளை வரவேற்று உரையாற்றிய நீர்வளத் துறை அரசுச் செயலாளர், ஜெ.ஜெயகாந்தன், நீர்நிலைகளைப் புத்துயிர் பெறச் செய்வதில் சமூகப் பங்களிப்பின் அவசியத்தை குறித்தும் முக்கியத்துவத்தை குறித்தும் வலியுறுத்தினார்.*

*பயிலரங்கத்தை துவக்கி வைத்து உரையாற்றிய தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் என்.முருகானந்தம், இன்றைய நிலையில் தமிழ்நாடு 65 சதவிகிதம் நகரமயமாக்கலில் உள்ளது ஆகையால் மாநிலத்தின் நீர்நிலைகளை சரியான முறையில் பராமரிப்பதின் மூலம், தேவையான நீரை சேகரிக்கவும் வெள்ளத்தை கட்டுப்படுத்தவும் பயன்படும் என்றும், இப்பணிகளை மக்கள் ஒருங்கிணைப்போடு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.*

*சிறப்பு விருந்தினராக பங்கேற்ற மகாராஷ்டிரா மாநிலத்தின் மண் மற்றும் நீர் பாதுகாப்பு துறையின் தலைமைப் பொறியாளர் மற்றும் இணைச் செயலர் விஜய் டியோராஜ், மகாராஷ்டிரா மாநிலத்தில் மக்கள் பங்களிப்போடு செயல்படுத்தப்பட்டு வரும் நீர்நிலைகள் மேம்படுத்தும் பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.*

*நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் துறையின் முதன்மைச் செயலாளர், டி.கார்த்திகேயன், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பி.அமுதா மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி ஆகியோர் தலைமையில், சமூக பங்களிப்புடன் நீர்நிலைகளைப் புனரமைப்பது தொடர்பான பல்வேறு தலைப்புகளில் குழு விவாதங்களும் நடத்தப்பட்டன.*

*நீர்நிலைகளைப் புத்துயிர் பெறுவதற்கான பயிலரங்கை முன்னெடுத்துச் செல்ல ஆக்கப்பூர்வமான வழிமுறைகளை உருவாக்கி, மக்கள் பங்களிப்புடன் பொது-தனியார் கூட்டமைப்பின் மூலம் நீர்நிலை களை மேம்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த நிதித்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் டி.உதயசந்திரன் வலியுறுத்தினார்.*

*மேலும், இப்பயிலரங்கத்தில் திருமதி சுப்ரியா சாகு, கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், சிப்காட் மேலாண் இயக்குநர் கே.செந்தில்ராஜ், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் ஸ்ரீனிவாச ஆர்.ரெட்டி, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை ஆணையர் பி.பொன்னையா, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை கூடுதல் இயக்குநர் கே. அருண்மணி, மத்திய நிலத்தடி நீர் வாரியத்தின் சென்னை மண்டல இயக்குநர் ஆர்.சிவக்குமார், சென்னை நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் திருமதி ஜானகி, இணைத் தலைமைப் பொறியாளர் பொதுப்பணி திலகம் உள்ளிட்ட உயர் அலுவலர்கள், ஐ.ஐ.டி. மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தை சார்ந்த கல்வியாளர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.*

*மேலும் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகளான ஸ்வரன்சிங்., இ.ஆ.ப., (ஓய்வு) / தலைவர், TVS SST, அருண் கிருஷ்ணமூர்த்தி, EFI, நிமல் ராகவன், MEGA Foundations, செந்துார் பாரி, ExNoRa Intl. Foundation, சி.சின்னசாமி, Siruthuli, சக்திவேல் பீமராஜா, Ramco Community Services, சுப்பிரமணியன், SPIC Ltd., வெங்கடேசன், DHAN Foundations, ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.*

*இறுதியாக, நீர்வளத் துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) எஸ்.இரமேஷ் அவர்களின் நன்றியுரையுடன் பயிலரங்கு இனிதே நிறைவடைந்தது.*

### எழுத்தறிவுத் திட்டம்:

# உங்களில் எத்தனை பேருக்கு இது தெரியும்?

## ஜப்பானிலிருந்து முனைவர் கணேஷ்!


அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு மதிப்பீட்டுத் தேர்வு (FLNAT), ஒன்றிய அரசால் நாடு முழுவதும் வயது வந்தோருக்காக நடத்தப்படுகிறது. தமிழ்நாடு 100% தேர்ச்சி விகிதத்தைப் பெற்று, FLNAT தேர்வெழுதிய 5,09,694 மாணவர்களுக்கும் சான்றளித்தது.

நாட்டின் பிற பகுதிகள் படிக்க வேண்டிய ஒரு எழுத்தறிவு நெகிழ்வை தமிழ்நாடு இப்போதுதான் உருவாக்கியது. இந்த ஆண்டு மாநில எழுத்தறிவுத் தேர்வில் பங்கேற்ற 5,09,694 வயது வந்தவர்களில் ஒவ்வொருவரும் தேர்ச்சி பெற்றனர். அது எழுத்துப் பிழை அல்ல, 100% ஒரு தசமப் பிழை அல்ல.

இது ULLAவின் வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண் மதிப்பீட்டுத் தேர்வு அல்லது FLNAT என்ற தேசிய முயற்சியின் ஒரு பகுதியாகும். இது இந்தியா முழுவதும் வயது வந்தோர் கற்பவர்களிடையே அடிப்படை வாசிப்பு, எழுத்து மற்றும் கணிதத் திறன்களைச் சோதிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தங்கத் தரமாக இருந்த போதிலும், டெல்லி மற்றும் திரிபுரா ஆகியவை பின்தங்கியிருக்கவில்லை, முறையே 99.3% மற்றும் 98.1% தேர்ச்சி விகிதங் களைப் பெற்றன.

**மலைகளை நகர்த்தினர்!**

**தேசிய சராசரி 19.4% தான். பெரும்பாலான மாநிலங்கள் தோல்வியடைந்த நிலையில், தமிழ்நாடு எப்படி முன்னேறியது? பஞ்சாயத்துகள், தேர்வுக்கு முந்தைய தயாரிப்பு மற்றும் உள்ளூர் தன்னார்வலர்கள் மூலம் வலுவான திட்டமிடல் சமூக அணிதிரட்டல் ஆகியவற்றுக்கு பெருமை சேர்க்கிறது, அவர்கள் வெறும் பெட்டிகளை மட்டும் நகர்த்தவில்லை, அவர்கள் மலைகளை நகர்த்தினர்.**




மறுபுறம், குஜராத் மற்றும் இமாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் 80களில் இருந்தன, பீகார், ராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற பகுதிகள் இன்னும் வழக்கமான சந்தேக நபர்களான வறுமை, குழந்தைத் தொழிலாளர், பாலின இடைவெளிகள், பலவீனமான உள்கட்டமைப்பு மற்றும் உள்ளூர் பொறுப்புணர்வு இல்லாமை ஆகியவற்றால் சுமையாக உள்ளன. இது வெறும் புள்ளிவிவரம் அல்ல, இது ஒரு சமிக்ஞை.

சரியான அரசியல் விருப்பமும், அடிமட்ட மக்களின் ஆதரவும் இருந்தால், கடினமான எழுத்தறிவு சவால்களைக் கூட சமாளிக்க முடியும்.

ஒரு கற்பவர், ஒரு கிராமம், ஒரு நேரத்தில் ஒரு திருப்புமுனை!

# துறைமுகத்தில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, ஜூன் 16–

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 115வது நாள் துறைமுகம் தொகுதி – இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு ”அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெரும் திட்டத்தின் 115 ஆம் நாளான – கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (14.6.2026) துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி வட்டம் 56 சண்முகராயன் தெரு தையப்பன் தெரு சந்திப்பு. 2) துறைமுகம் மேற்கு பகுதி வட்டம் 54 ஆ அம்மன் கோயில் தெரு, கிருஷ்ணப்பா, குளத் தெரு (ஆட்டோ ஸ்டேண்டு) அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ”தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் – இதுதான் ஒரே இலக்கு! என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம். தேவன், எம்.விஜயகுமார், என்.பி. எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம் கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராம மூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே. ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடி கள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் ரூ 3.90கோடி மதிப்பில் புதிதாக கட்டவுள்ளவருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் அடிக்கல் நாட்டி கட்டிட பணிகளை தொடங்கி வைத்தார்கள். உடன்மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் மயிலாடுதுறை நகர்மன்ற தலைவர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் மற்றும் பலர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி நகராட்சியில் ரூ 2.47 கோடி மதிப்பிலான சாலை அமைத்தல், உள்ளிட்ட வளர்ச்சி திட்ட பணிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தொடங்கி வைத்தார் உடன் நகராட்சி தலைவர் பரிதா நவாப், துணைத் தலைவர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, கிருஷ்ணகிரி நகரக் கழக பொறுப்பாளர்கள் அஸ்லாம் , வேல்மணி உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்.



நாகை மாவட்டம் நாகை தெற்கு ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் நாகை தெற்கு ஒன்றியத்திற்கு புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் தலைமை செயற்குழு உறுப்பினரும் நாகை தெற்கு ஒன்றிய செயலாளர் க.இ.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டேனியல் சத்தியா, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செ.கணேஷ்குமார் மற்றும் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் நெ.குணாநிதி, மூ.அன்புராஜ், ம.சபரிகிருஷ்ணன், கி. மோகன், கே.எஸ்.பாரதி, தி.சிவசுந்தரம், ம.விஜயகுமார், இரா.ஆனந்தராம் ஆகியோர் உள்ளனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாளை முன்னிட்டு இராசிபுரம் நகர கழக செயலாளர் என்.ஆர்.சங்கர் தலைமையில், இராசிபுரம் நகர்மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர் முன்னிலையில் நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மா.கார்த்திக் ஏற்பாட்டில் ராசிபுரம் புதிய பஸ் நிலையம் அருகே 500 பேருக்கு சர்க்கரைப் பொங்கல், தக்காளி சாதம், புளி சாதம் அன்னதானம் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச நோட்டு புத்தகம், பேனா வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் இளைஞரணி அமைப்பாளர் யோகராஜன் மற்றும் நகர இளைஞரணி அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.